**ஜய கன்டேனர் டேமினல் லிமிடட் - 2021**

**………………………………………………….**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜய கன்டேனர் டேமினல் லிமிடட்டின் (''கம்பனி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட கூற்று, உரிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திட்டத்தின் உள்ளகக் கட்டப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்தின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ஐய கொள்கலன் முனைய கம்பனியினால் பணம் செலவு செய்து இலங்கை துறைமுக அதிகார சபையினால் நிர்மாண நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்ற 3200 மெட்ரிக் தொன் கொள்ளளவுள்ள எரிபொருள் தாங்கியின் நிர்மாணங்கள் பூரணப்படுத்தப்பட்டு 2021 திசெம்பர் 14 ஆந் திகதி இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எரிபொருள் தாங்கி 2021 திசெம்பர் 20 ஆந் திகதியிலிருந்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதிகார சபையினால் இந்த நிர்மாணத்திற்கான இறுதித்தவணைப் பணமான ரூபா 19,937,601 தொகைபயினை கொடுப்பனவு செய்யுமாறு ஐய கொள்கலன் முனைய கம்பனிக்கு 2022 சனவரி 05 ஆந் திகதி தெரியப்படுத்தப்பட்டிருந்தது. உரிய சம்பவம் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்காக பணிப்பாளர் | இணங்கிக் கொள்ளவில்லை.<br><br>நிறுவனத்தினால் அட்டுறு கருது கோளின் அடிப்படையில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவு செய்யப்படாத அனைத்து இன்வொயிஸ்களுக்கும் கொள்வனவு கட்டளைகளுக்குமாக 2021-12-31 இல் உள்ளவாறு செம்மையாக்கல்கள் செய்யப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையின் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) Director Tecnician அவர்களால் இந்த தாங்கி முடிவுறுத்தப்பட்டதாக இந்த சான்றிதழ் (Certificate of | மீளாய்வாண்டின் இறுதியில் எரிபொருள் தாங்கியின் நிர்மாணங்கள் முழுமையாக பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதனால் நிர்மாணத்திற்கான இறுதி தவணைப் பணத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சபையின் அங்கிகாரத்தினை வழங்குவதற்கு முன்னர் அதாவது 2022 பெப்ரவரி 11 ஆந் திகதிக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவமாக இருந்த போதிலும் அப்பெறுமதி இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 10.3 (9) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நடைமுறையற்ற சொத்துக்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய பணம் ஆகிய விடயங்கள் ரூபா 19, 937,601 குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | Complation) 2022-01-06 ஆந் திகதி கையொப்பத்துடன் வழங்கப்பட்டுள்ளது என்பதனால் எங்கள் நிறுவனத்தின் கொள்கைக்கு இணங்க இத்தாங்கியின் இறுதித் தவணைப் பணம் 2021-12-31 ஆந் திகதியில் செம்மையாக்கல் செய்யமுடியாது. மேலும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் வழங்கப்பட்ட வரி இன்வொயிஸ் 2022-02-21 ஆந்திகதி வழங்கப்பட்டுள்ளது. எனவே இது 2022 ஆம் ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கலாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டின் போது ஒரு ஆலோசனைக் கம்பனிக்குச் செலுத்தப்பட்ட ரூபா 255,000 முற்பணம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அக்கொடுப்பனவுக்குரிய கொடுப்பனவு வவுச்சர்கள், பற்றுச் சீட்டுக்கள், துணை ஆவணங்கள் என்பன கம்பனியிடம் இல்லாததனால் அறவீடு செய்தல் நிச்சயமற்றதாக இருந்த போதிலும் அதற்காக பாதிப்புக்களின் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளவில்லை.<br><br>2007 ஆம் ஆண்டின் போது ஒரு ஆலோசனைக் கம்பனிக்குச் செலுத்தப்பட்ட ரூபா 255,000 முற்பணமானது கணக்காய்வுக் குழுவின் சிபாரிசினை அடிப்படையாகக் கொண்டு 2022-03-04 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் போது பதிவழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் அத்துடன் துணை ஆவணங்களை பாதுகாப்பாக பேணுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபையிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதிக்கும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் கம்பனிக்கு வழங்கியிருந்த மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அதிகார சபை செலுத்துவதற்கு இணங்கியிருந்த மீதிக்குமிடையே ரூபா 564,601 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசத்திற்குள் 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட சேவைகளுக்காக இலங்கை பெற்றோலியக் | இணங்கிக் கொள்ளவில்லை.<br><br>இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 544,684 பணம் இந்த ஆண்டில் உடன்படிக்கையில் கையொப்பமிடும் சந்தர்ப்பம் அளவில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் எங்கள் நிறுவனம் அடிக்கடி அனுப்பிய ஞாபகப்படுத்தல் கடிதத்திற்காக | உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி கிடைக்க வேண்டிய மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 544,684 மீதியும் காணப்பட்டது. இப்பணம் நீண்டகாலமாக கிடைக்காதிருந்தும் அதற்காக பாதிப்புக்கான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதுவித எழுத்து மூல பதிலும் இதுவரை வழங்கப்படாதிருந்தும் இந்த இன்வொயிஸ் தொடர்பாக கொடுப்பனவு செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என வாய் மொழி மூலம் தெரிவிக்கப்பட்டது. எனவே இந்த மீதியை கண்டிப்பாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதனால் பாதிப்புக்காக ஒதுக்கீடு செய்வதற்கான அவசியம் இருக்கவில்லை. |

### 1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| பெறவேண்டிய நிறுத்திவைத்தல் வரி | 1,540,551 | நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ் | இணங்கவில்லை.<br>நிறுத்திவைத்தல் வரி மீதியான ரூபா 1,540,551 தொகை கணக்காய்வு குழுவின் சிபாரிசின் அடிப்படையில் 2022-03-04 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது பதிவழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி இறுதி இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்க மின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1954 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 19 ஆம் இலக்க சாப்பு மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டத்தின் 1 ஆம் பகுதியின் 3 ஆம் பிரிவு. | ஏதாவது ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள் முறைவேலை முறைமையில் சேவையில் ஈடபடுவதாக இருந்தால் அச்சேவைக்காலம் ஒரு நாளுக்கு உச்ச அளவாக 8 மணித்தியாளலத்திற்கும் ஒரு வாரத்திற்கு 45 மணித்தியாளங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2021 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக சேவையில் ஈடபட்டிருந்த 40 ஊழியர்கள் 24 மணித்தியாளங்களும் முறை வேலைக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | கம்பனியின் சேவை தேவைப்பாட்டின் பிரகாரம் 24 மணித்தியால சேவை முறையானது செயற்பாட்டு நடவடிக்கைகள் வினைத்திறனாகவும் தடையின்றியும் மேற்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த 24 மணித்தியால சேவை முறையினை தொடர்ச்சியாக பேணுவதற்காக 25.02.2021 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகாரம் கிடைத்துள்ளது. | 1954 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 19 ஆம் இலக்க சாப்பு மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டத்தின் தேவைப்பாடுகளிலிருந்து மீறுவதாக இருந்தால் அதற்காக சட்டரீதியான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2014 சனவரி 06 ஆந் திகதிய 01.2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | கம்பனி 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியும் உரிய சம்பளமும் தீர்மானிக்கப்படாத ஒரு நிறுவனம் என்பதனால் வாழ்க்கைச் செலவு படிக்கு தகமையற்ற ஒரு நிறுவனமாக இருந்த போதிலும் கம்பனியால் 2018 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 7800 வீதம் 99 ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் போது 7,800 வாழ்க்கைச் செலவுப்படி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்தப்பட்டது. அதுவரை நிறுவனத்தின் ஊழியர்களுக்கு ரூபா 212.80 வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தப்பட்டிருந்தது. இது ரூபா 7,800 வரை அதிகரிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த படியை செலுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கம்பனியின் அமைப்பு புறவிதியிலுள்ள (ஆநஅழசயனெரஅ ழக யுளளழஉயைவழைெ) அடிப்படைக் குறிக்கோள் (ீசைஅயசல ழுடிதநஉவளைநள) பந்தி | கம்பனியின் அடிப்படையக் குறிக்கோள் ஐய கொள்கலன் முனையத்தை முகாமைத்துவம் செய்தல் மற்றும் செயற்படுத்துவது தொடர்பான நடவடிக்கை எடுப்பதாக இருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் 1.2 ஆம் குறிப்பின் பிரகாரம் கம்பனியின் பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மையாக இலங்கை துறைமுக அதிகார சபையின் கொழும்பு எண்ணை வங்கியை (ஊழடழஅடிழ ழுடை டீயமெ) முகாமைத்துவம் செய்வதாகக் காட்டப்பட்டிருந்தது. | கம்பனியின் அமைப்பு புறவிதியின் அடிப்படைக் குறிக்கோளினை கருத்தில் கொண்டு இலங்கை துறைமுக அதிகார சபையினால் முகாமைத்துவ சேவை உடன்படிக்கையின் கீழ் வரையறுத்த ஐய கொள்கலன் முனைய கம்பனிக்கு புளூமென்டலில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் கப்பல் எண்ணையை களஞ்சியப்படுத்தும் எண்ணை குதங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் செயற்படுத்துதல் நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது. | அமைப்பு புற விதியில் குறிப்பிட்ட குறிக்கோளினை திருத்தம் செய்ய வேண்டுமா என்பதனை விசாரித்து பார்த்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகளுக்காக தோற்றுவிக்கப்பட்ட நல்லாட்சி வழிகாட்டிகளின் 2.2.5 ஆம் பிரிவு | துணைக் கம்பனிக்காக பணிப்பாளர் சபை அங்கீகரித்த துணைக் கம்பனியின் கொள்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் அதிகாரசபையின் கீழ் காணப்படும் கம்பனியை உள்ளடக்கி துணைக் கம்பனிகளுக்காக இதுவரை துணைக் கம்பனியின் கொள்கை தயாரிக்கப்படவில்லை. | இணங்க வில்லை.<br>2021/01 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தாய்க் கம்பனியான இலங்கை துறைமுக அதிகார சபையின் கடமையாகும். | துணைக் கம்பனியின் கொள்கையை தயாரிப்பது தொடர்பாக தாய்க் கம்பனியுடன் இணைந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

..................

### 2.1 நிதி விளைவுகள்

......................

கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் இலாபம் ரூபா 65,452,487 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது ரூபா 12,595,879 ஆக இருந்ததனால் நிதி விளைவுகளில் ரூபா 52,856,608 அதாவது 420 சதவீத முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டிற்கான நிதி விளைவுகள் அதிகரித்ததற்காகஇலங்கை துறைமுக அதிகார சபையிடமிருந்து கிடைத்த செயற்பாட்டு வருமான வீதம் 40 சதவீதத்திலிருந்து 55 சதவீதம் வரை அதிகரித்தல் எண்ணை செயற்பாட்டு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினைப்போல நாணயமாற்று வீதத்தின் அதிகரிப்பும் தாக்கமளித்திருந்தது.

## 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா | 2019<br>ரூபா | 2018<br>ரூபா | 2017<br>ரூபா |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 297,763,569 | 210,560,557 | 283,793,238 | 287,571,286 | 247,033,670 |
| செயற்பாடற்ற வருமானம் | 3,704,695 | 681,501 | 2,535,504 | 211,748 | 220,351 |
| விற்பனைக் கிரயம் | (133,785,314) | (123,039,082) | (145,548,202) | (143,328,431) | (109,631,277) |
| மொத்த இலாபம் | 163,978,255 | 87,521,475 | 138,245,036 | 144,242,855 | 137,402,393 |
| நிருவாகச் செலவுகள் | (100,120,227) | (89,217,343) | (83,699,866) | (80,938,692) | (61,508,414) |
| நிதி வருமானம் | 17,230,071 | 23,809,889 | 43,232,258 | 49,651,749 | 41,601,847 |
| நிதி செலவுகள் | (4,825,720 | (3,022,544) | (1,846,297) | (551,000) | (651,369) |
| வரிக்கு முன்னைய இலாபம் | 79,967,074 | 19,772,978 | 98,466,635 | 112,616,660 | 117,064,808 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 87.2 மில்லியனால் அல்லது 41 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

ii. 2017 ஆம் ஆண்டிற்கான ரூபா 3.1 மில்லியனை பராமரிப்புச் செலவுகள் 2019 ஆம் ஆண்டு வரை படிப்படியாக அதிகரித்து 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 157 சதவீத அதிகரிப்புடன் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 12.4 மில்லியனாக இருந்தது.

iii. ஊழியர் பயிற்சி செலவுகள், ஊழியர் மருத்துவ திட்டத்திற்கான செலவுகள், சட்டச் செலவுகள் அலுவலக மோட்டார் வாகன பராமரிப்புச் செலவுகள், வாகன வாடகை செலவுகள் ஆகிய செலவுகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது 100 சதவீதத்தினை மிகைத்த சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

iv பாதுகாப்புச் செலவுகள் மற்றும் மோட்டார் வாகனத்திற்கான எரிபொருள் செலவுகள் என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது முறையே 27 சதவீதம் மற்றும் 57 சதவீத அதிகரிப்புடன் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 14.57 மில்லியன் மற்றும் ரூா 2.7 மில்லியனாக இருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| | | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| i | நடைமுறை சொத்துக்கள் விகிதம் | 9.25:1 | 12.73:1 | 21.23:1 | 19.04:1 | 23.19:1 |
| ii | விரைவுச் சொத்துக்கள் விகிதம் | 9.20:1 | 12.66:1 | 21.12:1 | 18.93:1 | 23.19:1 |
| iii | மொத்த இலாப விகிதம் | 55% | 42% | 49% | 50% | 56% |
| iv | வருமானத்திற்கான செயற்பாட்டு இலாப விகிதம் | 21% | -1% | 19% | 22% | 31% |
| v | தேறிய இலாப விகிதம் | 22% | 6% | 33% | 32% | 42% |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i 2017 ஆம் ஆண்டின் போது மொத்த வருமானத்திற்கு நேரொத்ததாக 31 சதவீதமான செயற்பாட்டு இலாபம் படிப்படியாக குறைவடைந்து 2020 ஆம் ஆண்டின் போது சதவீதம் மறைப் பெறுமதியாகி செயற்பாட்டு நட்டம் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது 21 சதவீத அதிகரிப்பினை பெற்றுக்கொண்டிருந்தது.

ii 2017 மற்றும் 2020 காலப்பகுதியியை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும் போது தேறிய இலாப விகிதம் 42 சதவீதத்திலிருந்து 6 சதவீதம் வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டின் போது 22 சதவீத தேறிய இலாப விகித்தினை கம்பனி பெற்றுக்கொண்டிருந்தது.

iii 2017 ஆம் ஆண்டிற்கான நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் முறையே 23.19:1 வீதப்படி காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அது முறையே 9.25:1 மற்றும் 9.20:1 வரை படிப்படியாக குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

.................................

### 3.1 செயலாற்றல்

..................

**i** 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எல்எஸ்எப்ஓ (டுளுகுழு 380) வகையான எண்ணையை தரையிறக்குதல் (னுளைஉாயசபைெ) 12 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் கப்பல் கேஸ் எண்ணை 18 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

ii 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் போது எல்எஸ்எப்ஓ (டுளுகுழு 380) வகையான எண்ணை ஏற்றுதல் (டுழயனைபெ) 12 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் கப்பல் கேஸ் எண்ணையை (ஆநசசைநெ புயளழுடை ) இறக்குதல் 25 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 1,100 மெற்றிக் தொன் கொள்ளளவுள்ள 105 ஆம் இலக்க தாங்கியில் 380 (ர்ளுகுழு) வகையான எண்ணை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எண்ணைத் தாங்கியில் காணப்பட்ட பௌதீக மீதி 275 மெற்றிக் தொன்களாகும். மேற்கூறிய 380 (ர்ளுகுழு) வகையான எண்ணையில் இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய 72 மெற்றிக் தொன்களும் இலங்கை சுங்கத்தினால் வைத்திருக்கப்பட்ட 162 மெற்றிக் தொன்களும் காணப்பட்டன. மேற்கூறிய எண்ணை இருப்பு நீண்ட காலமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனங்களிடமிருந்து களஞ்சிய கட்டணங்கள் Tank Storage Charges அறவிடப்படவில்லை. | இணங்க வில்லை.<br><br>தனியார் அனுமதிப்பத்திம் பெற்ற நிறுவனங்களுக்குரிய 40 மெட்றிக் தொன்களுக்காக களஞ்சிய கட்டணம் அறவிடப்படும். இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய 72 மெற்றிக் தொக்களுக்காகவும் இலங்கை சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட 162 மெற்றிக் தொன்களுக்காகவும் களஞ்சியக் கட்டணம் அறவிடப்படும் இயலுமை காணப்படவில்லை. | உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி எண்ணைத் தாங்கிகளின் இடவசதிகளை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனி எண்ணை அனுமதிப்பத்திரகாரர்களுடன் கையொப்பமிட்ட உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கட்டணப் பட்டியலின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் கப்பல் எண்ணை அனுமதிப்பத்திரதாரர்கள் எவரும் ஒரு காலாண்டிற்குள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொண்ட சராசரி இடவசதி பயன்பாடு (Average Space Utilization) இணங்கி கொண்ட ஆகக் குறைந்த இடப் பயன்பாட்டினை Minimum Utilization விட குறைவடையுமாகவிருந்தால் ஒரு மெற்றிக் தொன்னுக்காக ஒரு மாதத்திற்கு அமெரிக்க டொலர் 10 பெறுமதி சேர்வரி மற்றும் நாட்டை கட்டியெழுப்புதல் வரி அறவிடப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியால் நடைமுறையில் பின்பற்றப்படுகின்ற கணிப்பீட்டின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தில் எண்ணை அனுமதிப்பத்திரகாரகளால் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணையின் அளவு (Imported Oil Stock) வழங்கப்பட்ட எண்ணையின் அளவு (Issued Oil Stock) மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எண்ணையின் அளவின் (Re- Bond Oil Stock) மொத்தம் ஆகக் குறைந்த பயன்பாட்டினை விட குறைவடையும் சந்தர்ப்பத்திற்காக காலாண்டிற்கு ஒரு தடவை மெற்றிக் தொன் அளவினை கருத்தில் கொள்ளாது ஒரு மாதத்திற்கு அமெரிக்க டொலர் 10 வீதம் அறவிடப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் நிதிப்பிரிவினால் நிகழ்காலத்தின் குறைந்த பயன்பாட்டிற்காக இன்வொயிஸ் வழங்கும் போது ஒவ்வொரு மாதத்தில் எண்ணை அனுமதிப்பத்திரதாரர்களால் இறக்குமதி செய்த எண்ணையின் அளவு, வழங்கப்பட்ட எண்ணையின் அளவு, ஏனைய அனுமதிப்பத்திரதாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எண்ணையின் அளவு என்பன தொடர்பான விபரத்தை செயற்பாட்டு பிரிவில் பெற்றுக்கொண்டு ஒரு காலாண்டிற்கு கணித்து ஆகக் குறைந்த இடப்பயன்பாட்டினை விட குறைந்த அனுமதிப்பத்திரதார்களிடமிருந்து ஒரு மாதத்திற்கு US$ 10 வீதம் அறவிடப்படுகின்றது. எதிர்காலத்தில் மெற்றிக் தொன் அளவிற்கு இணங்க அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையில் குறிப்பிட்ட வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 செப்தெம்பர் 18 ஆந் திகதிய ஜேசீடீ/55/2020 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தின் மூலம் கொழும்பு துறைமுகத்தால் வழங்கப்படுகின்ற 35,000 மெற்றிக் தொன் கப்பல் எண்ணை கொள்ளளவு போதியதல்ல எனவும் கொழும்பு துறைமுகத்தின் கப்பல் எண்ணை வேண்டுதல் மெற்றிக் தொன் 55,000 இலிருந்து 60,000 மெற்றிக் தொன் அளவானது எனவும் காட்டி எண்ணை தாங்கியை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான இடத்தினை இனங்காண்பதற்கும் அந்த தாங்கிகளின் உச்ச கொள்ளளவினை மதிப்பீடு செய்வதற்கும் கொழும்பு மாநகர சபையின் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் அங்கீகாரத்தினை | அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை பல தடவைகள் எங்கள் நிறுவனத்திற்கு அழைத்து அவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் போது புதிய தாங்கிகளை நிர்மாணிப்பதற்காக அதிக தேவைப்பாடு காணப்பட்டதாக அவர்கள் தெரிவித்திருந்தார்கள் அந்த அழைப்புக்களின் பின்னர் பல தடவைகள் அவர்களால் எழுத்துமூலம் எங்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்காக வேண்டிக்கொண்டிருந்தனர். அவ்வாறே அவர்கள் தெரிவித்தவாறு தாங்கிகளின் | எண்ணை தாங்கிகளின் கொள்ளளவு பயன்பாட்டு வீதம், எண்ணை அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து கிடைத்துள்ள வேண்டுதல்கள், எண்ணை களஞ்சிய இருப்பு தொடர்பான காலப்குப்பாய்வு, காணப்படுகின்ற நிதி நிலைமை, புதிய முதலீட்டு மதிப்பீடு என்பவற்றின் மூலம் புதிய எண்ணை |

வேண்டுவதற்கு முன்னர் தெரிவு செய்த இடங்களில் மண் பரிசோதனையை மேற்கொள்வதற்காக கம்பனியினதும் இலங்கை துறைமுக அதிகார சபையினதும் உத்தியோகத்தர்களை உள்டக்கிய ஒரு தொழில்நுட்பக் குழுவினை நியமிப்பதற்கு சுபாரிசு செய்யப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் தொடக்க கிரயத்திற்கு நிதியளிக்கும் முறைமையை உள்ளடக்கிய தொடக்க செயற்திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாததுடன் 12,000 மெற்றிக் தொன் வீதம் 02 தாங்கிகளை நிர்மாணிப்பதற்காக 2020-2024 கூட்டிணைந்த திட்டத்திலும் மற்றும் நிர்மாணிப்பதற்குரிய தொடக்க செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2022 செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இப்பத்திரத்திற்காக அத்திகதியிலேயே பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

கம்பனியினால் நாளாந்தம் ஒவ்வொரு தாங்கியில் காணப்படும் எண்ணை இருப்பினை அறிக்கையிடும் தகவல் முறைமை பேணப்படாமையின் காரணமாக தாங்கியின் பயன்பாடு தொடர்பான சரியான தரவினை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. எவ்வாறாயினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியிடம் காணப்பட்ட 14 தாங்கிகளில் ஒவ்வொரு மாதத்தின் இறுதி திகதியில் காணப்பட்ட கப்பல் எண்ணை இருப்பின் அளவின் பிரகாரம் கணிக்கப்பட்ட தாங்கியின் கொள்ளளவு பாவனை விகிதத்தின் பிரகாரம் 11 தாங்கிகள் தொடர்பாக 37 சதவீதத்திலிருந்து 69 சதவீதம் வரையான கொள்ளளவு பாவனை அவதானிக்கப்பட்டதுடன் 70 சதவீதத்திற்கு மேற்பட்ட சராசரி கொள்ளளவு பயன்பாடு உள்ள எண்ணை தாங்கிகளின் எண்ணிக்கை 02 மாத்திரமாகும். அவ்வாறே 2021 திசெம்பர் மாதத்தில் புதிதாக பூர்த்திசெய்த 3200 மெற்றிக் தொன் கொள்ளளவைக் கொண்ட தாங்கியில் 2022 சனவரியிலிருந்து மார்ச் மாதம் கொள்ளளவை சிறிய அளவின் கீழும் அந்த அளவுக்கு பல தடவைகள் எண்ணையை இறக்குமதி செய்யும் போது அவர்களுக்கு அதிக கப்பல் கட்டணத்தை செலுத்துதல் இடம்பெறுகின்றது. எனவே தாங்கியின் கொள்ளளவை அதிகரிப்பதன் மூலம் அவர்களின் இறக்குமதி செலவை குறைப்பதன் மூலம் அதிக எண்ணையை இறக்குமதி செய்யலாம் என அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

நாளாந்த எண்ணை இருப்பு அறிக்கை (Tank Measurement Report) எங்களால் பேணப்படுகின்றது. அவ்வாறே எங்களின் முழுமையான கொள்ளளவு வாடிக்கையாளர்கள் எண்ணையை இறக்குமதி செய்யாது எங்களிடம் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட கொள்ளளவின் காரணமாக நாங்கள் அவர்களுக்கு வழங்கியுள்ள கொள்ளளவு அளவின் பிரகாரமாகும். அதற்கிணங்க வழங்கியுள்ள உயர்ந்த கொள்ளளவு அளவானது LSFO இற்காக 2730 மெற்றிக் தொன்களும் MGO இற்காக 1050 மெற்றிக் தொன்களுமாகும். எனவே மேலே குறிப்பிட்டவாறு செய்த வேண்டுதல்களை கவனத்தில் கொண்டு இன்னும் இரண்டு 12,000 மெற்றிக் தொன் தாங்கிகளை நிர்மாணிக்கும் தொடக்க நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட்டது.

தாங்கியை நிர்மாணிப்பது தொடர்பான தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

வரை நாளாந்த தாங்கியன் பயன்பாட்டு விகிதத்தின் சராசரி 41 சதவீதமாகும். மேலே கூறப்பட்டவாறு தாங்கியின் பாவனை விகிதம் உச்ச மட்டத்தில் இல்லாதிருந்தும் 12,000 மெற்றிக் தொன்களான 02 புதிய தாங்கிகளை நிர்மாணிப்பதற்கான தொடக்க நடவடிக்கைகளை ஆரம்பித்தலானது சச்சரவுத் தன்மைக்குரிய விடயம் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2018 மே 03 ஆந் திகதிய JCT/15/2018 ஆம் இலக்க பணிப்பாளர்கள் சபை தீர்மானத்தின் மூலம் பொதுத்திறைசெரியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு 2018 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து கம்பனியின் அனைத்து ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 5,000 ஆல் அதிகரிப்பதற்கும் ரூபா 5,000 இனை ஒரு படியாக செலுத்துவதனையும் உள்ளடக்கி ரூபா 10,000 ஆல் சம்பளம் மற்றும் படிகளை அதிகரிப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஜய கொள்கலன் முனையக் கம்பனியால் 2018 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து சம்பளம் படியை ரூபா 5,000 வீதம் அதிகரித்திருந்தும் அதற்காக பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் திறைரேயின் எழுத்துமூல அங்கீகாரம் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரை கிடைத்திருக்கவில்லை.

மேலும் 2020 திசெம்பர் 23 ஆந் திகதிய JCT/79/2020 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் அடுத்துவரும் 3 ஆண்டுகளுக்கான தொடக்க சம்பளத்தை 10 சதவீதத்தால் அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 சனவரி 07 ஆந் திகதிய JCT/04/2022 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் 2022 சனவரியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் அடிப்படைச் சம்பளத்தில் 15 சதவீதசம்பள அதிகரிப்பினை வழங்குமாறும் மீண்டும் 2024 ஆம் ஆண்டு வரை சம்பள அதிகரிப்பு வழங்காதிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இந்த பணிப்பாளர் சபை தீர்மானத்தை எடுக்கும் போது சம்பள அதிகரிப்பு சம்பந்தமாக 2021 ஆம் ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்கு பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு இணங்க இச்சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டம் பணிப்பாளர் நாயகம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் நடாத்தியதுடன் அதன் போது கிடைத்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் இச்சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 2022 -01-07 ஆந் திகதி எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 2022-01-24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சம்பள அதிகரிப்பு தொடர்பாக அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அக்கடிதத்திற்கான பதிலாக 2022-03-14 ஆந் திகதியகடிதத்தின் மூலம் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் தெரியப்படுத்தப்பட்டதாவது சம்பள அதிகரிப்புக்கள் போன்ற கொள்கைத் தீர்மானாததிற்காக தாய்க் கம்பனியான இலங்கை துறைமுக அதிகார சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். அதற்கிணங்க 2022-03-23 ஆந் திகதி இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவருக்கு ஒரு கடிதத்தினை அனுப்பி அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022-02-09 ஆந் திகதி இலங்கை துறைமுக அதிகார சபைக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு இணங்க 14 நாட்களுக்குள் பதில் கிடைக்காவிடின் அத்தீர்மானம் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபையின் எதிர்ப்பு

2018 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற சம்பள அதிகரிப்பிற்காக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்பிற்காக தாய்க கம்பனியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | வழங்கிய தீர்மானத்தை கவனத்தில் கொள்ளாது 2022 ஆம் ஆண்டின் போதும் மீண்டும் 15 சதவீத வம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 23 ஆந் திகதிய JCT/79/2020 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்திற்காகவும் வரிசை அமைச்சின் அங்கீகாரம் திறைசேரியின் இணக்கப்பாடு தாய்க்கம்பனியான இலங்கை துறைமுக அதிகார சபையின் அங்கீகாரம் என்பவற்றினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இல்லை எனக் கருதி அத்தீர்மானம் அமுல்ப்படுத்தப்படும் என எங்கள் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டது. |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்கு முறையான தாபன திட்டமும் ஆட்சேர்ப்பு நடைமுறையும் தயாரிக்கப்பட்டு தாய்க் கம்பனியான இலங்கை துறைமுக அதிகார சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக தொலைபேசயின் மூலம் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன் இதுவரை ஆட்சேர்ப்ப நடைமுறை தயாரிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. | முறையான தாபன திட்டமும் ஆட்சேர்ப்பு நடைமுறையும் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியிடம் கம்பனியின் ஊழியர்கள் தொடர்பான ஒழுக்காற்று நடைமுறை இருக்கவில்லை | ஜய கன்டேனர் லிமிடட் கம்பனியின் நிதி மற்றும் நிருவாகக் கையோட்டினைத் தயாரிப்பதற்காக ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஒழுக்காற்று நடைமுறைகளைத் தயாரித்தல் அதன் கீழ் இடம்பெற்று வருகின்றது. | ஒழுக்காற்று நடைமுறைகளைத் தயாரித்து தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |